செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண்: 350 நாள்: 15/6/17

## பொது அறிவிப்பு

## வேலூர் மாநகர, நகர அளவைத் திட்டப்பணி

வேலூர் மாவட்டம், வேலூர் வட்டம், வேலூர் மாநகர எல்லைக்குட்பட்ட சத்துவாச்சாரி, கொணவட்டம், அலமேலுமங்காபுரம், தொரப்பாடி, சேண்பாக்கம், அரியூர், அல்லாபுரம், பலவன்சாத்து, இடையஞ்சாத்து, வேலூர் (வடக்கு), வேலூர் (தெற்கு), விருப்பாட்சிபுரம் ஆகிய கிராமங்களிலும், காட்பாடி வட்டத்தில் தாராபடவேடு, காட்பாடி, கழிஞ்சூர், விருதம்பட்டு, காங்கேயநல்லூர், காந்திநகர் ஆகிய கிராமங்களிலும், நவீன நிலஅளவைக் கருவிகளைக் கொண்டு மறு நில அளவைப் பணி செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக சத்துவாச்சாரி மற்றும் கொணவட்டம் கிராமங்களில் நகர அளவைப் பணி நடைபெற்று வருகிறது. நகர அளவைப் பணிக்காக நிலஅளவைத் துறை பணியாளர்கள் வீட்டின் உரிமைதாரர்களைச் சந்தித்து விபரம் சேகரித்து நிலஅளவை ஆவணங்களில் தற்போதைய நிலையிலான விவரங்களை பதிவேற்றம் செய்ய உள்ளனர். எனவே வீட்டின் உரிமைதாரர்கள் இந்த அரிய வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொண்டு தங்களுக்கு சொந்தமான இடத்திற்கு பத்திர ஆவணங்களை அளவைப் பணி மேற்கொண்டு வரும் நிலஅளவைப் பணியாளர்களின் பார்வைக்கு சமர்ப்பித்து சரிபார்த்துக் கொள்ளுமாறும், அளவுப்பணி செய்ய வரும் நிலஅளவை அலுவலர்களுக்கு முழு ஒத்துழைப்பு வழங்கி பயன் பெறுமாறும் பொது மக்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(ஒம்) . . . . .

மாவட்ட ஆட்சியர்,
வேலூர்.

(உத்தரவு)

செ.ம.தொ.அ.
வேலூர் - 9.

14/6/17
உதவி இயக்குநர், நி.அ.பதிவேடுகள்